KANTON AARGAU

**DEPARTEMENT**
**BILDUNG, KULTUR UND SPORT**
Abteilung Volksschule

Sektion Schulaufsicht

*Zeitfenster Online-Befragung:*
*von bis*

Tamil

**ஆர்காவ் தொடக்கப்பள்ளியில் மண்டல தரக்கட்டுப்பாடு**

**பெற்றோர் கருத்துக்ககணிப்பிற்கான விவரங்கள்**

---

அன்புள்ள பெற்றோர்களே
மண்டல பள்ளி ஆய்வுக்குழு மண்டலத்தில் உள்ள ஒவ்வொரு பள்ளியிலும் 5 வருடத்திற்கு ஒரு முறை, அந்தப் பள்ளி வரையருக்கப்பட்ட தரநிலைகளைப் பூர்த்தி செய்கிறதா மற்றும் மண்டலத்தின் தேவைகளுக்கு ஏற்றவாறு உள்ளதா என்று ஆய்வு செய்கிறது[1]. பெற்றோர்களின் எழுத்துப்பூர்வமான கருத்துக்கணிப்பு இந்த ஆய்வு நடைமுறையில் ஒரு முக்கிய பகுதியாகும். பிற்காலத்தில் பெற்றோர்கள் கூடுதல் பேச்சுவார்த்தைக்காக கேட்கப்படுவதும் சாத்தியமாகும். இந்தக் கருத்துக்கணிப்பு வடமேற்கு சுவிட்சர்லாந்தின் பயன்பாட்டு அறிவியல் பல்கலைக்கழகத்தில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியின் பள்ளி ஆய்வுக்குழு சார்பாக மேற்கொள்ளப்படுகிறது.
இந்தக் கடிதத்துடன் ஆன்லைன் கருத்துக்கணிப்பை அணுகும் குறியீட்டை(TAN) நீங்கள் பெறுவீர்கள். இதைக்கொண்டு நீங்கள் உள்ளே நுழையுங்கள். ஒவ்வொருவருக்கும் கடவுச்சொற்கள் மற்றும் பெயர்கள் ஒதுக்கப்படவில்லை, எனவே உங்கள் பெயர்கள் வெளியில் தெரியாமல் பாதுகாக்கப்படுகிறது.
இந்தக் கேள்விகளுக்கு பதிலளிக்க சுமார் 20 நிமிடங்கள் ஆகும். இந்த ஆன்லைன் கேள்விகளுக்கு நீங்கள் உங்கள் கணினி, டேப்லெட் அல்லது ஸ்மார்ட் போனிலிருந்து பதிலளிக்கலாம். பள்ளியில் உங்களுக்கு பல குழந்தைகள் இருந்தால், நீங்கள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கேள்வித்தாள்களை நிரப்பலாம்.
மேலும் தொடர:

- நீங்கள் இணைய முகவரி www.vorbefragung.ch (கணினியின் மூலம்) உள்ளிடலாம் அல்லது QR-குறியீட்டை ஸ்கேன் செய்யலாம் (டேப்லட் அல்லது ஸ்மார்ட் போன் மூலம்).
- பின்னர் உங்கள் அணுகல் குறியீட்டை "TAN / Losung" புலத்தில் உள்ளிடவும்.
- கேள்வித்தாள் ஜெர்மன் மொழியில் தோன்றும். கீழ் தோன்றும் மெனுவில் நீங்கள் பதினோரு கூடுதல் மொழிகளைத் தேர்தெடுக்கலாம்.
- கொடுக்கப்பட்ட **கால அவகாசத்திற்குள்** கேள்விகளுக்கு பதில் அளிக்கவும்.
- கேள்வித்தாளை "Absenden" உடன் முடிக்கவும் .

பள்ளி ஆய்வுக்குழு உங்கள் எண்ணங்களை அறிய ஆர்வமாக உள்ளது மற்றும் கருதத்துக்கணிப்பில் உங்கள் பங்கேற்பிற்கு நன்றி கூறுகிறது.

அன்புடன்
Schulaufsicht
sa.volksschule@ag.ch

---

[1] கூடுதல் விவரங்கள் https://www.schulen-aargau.ch/regelschule/schulorganisation/qualitaet-aufsicht/kantonale-qualitaetskontrolle